


# ஆடிப்பாடும் பாடல்

சிறுவர் பாடல்கள்

ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பாடும் பாடல்

## சிறுவர் பாடல்கள்

ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஆடிப்பாடும் பாடல் |
| ஆசிரியர் | : | ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| வகை | : | சிறுவர் பாடல்கள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படமும் படங்களும் | : | ச. அருளானந்தம் |
| முதற்பதிப்பு | : | 27 - 09 - 2012 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி,<br>உவர்மலை - திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L. 14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-53372-2-9 |
| விலை | : | ரூபாய் 150/= |




## படையல்...

ஊனுயிர் தந்து உலகினுள்
உலாவரச் செய்த
என்னருமைப் பெற்றோருக்கு
ஆ - ர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அருள்இவர் அருளிய பாடல்இவை
அனைத்தும் சிறுவர்க் குரியனவே
பொருளுடன் இசையும் பொருந்திடுமே
புதுப்புது அறிவும் புகட்டிடுமே

நாளுக் கொன்றெனப் பாடிவரின்
நலமொரு மாதம் முடிவுறுமே
வாழும் சிறுவர்க் குகந்ததுவே
வளரும் தமிழும் வரைந்திடலாம்

சிறுவர் பாநூல் பதினேழும்
சேரப் படிப்பவர் பெரும்புலமை
பெறுவார் தமிழில் - பெரியார்தான்
பெற்றால் - கற்றால் பெரும்புகழே!

அருள்நூல் கற்பதோர் ஆனந்தம்
அறிவுப் பஞ்சம் அகன்றொழியும்
இருள் எனும்மடமை நீங்கிவிடின்
என்றும் ஒளியோ டிருந்திடலாம்.

- தாமரைத்தீவான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாளர் உரை

'ஆடிப்பாடும் பாடல்' என்றச் சிறுவர்கள் பாடல்கள் நூலைப் திரு. ச. அருளானந்தம் அவர்கள் எழுதியுள்ளார். திரு.ச.அருளானந்தம் அவர்கள் நல்லாசானாய் விளங்கியவர். நிறைந்த கற்பித்தல் அனுபவமிக்கவர். அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும் சேவை செய்து ஓய்வு பெற்றவர். அவரது அனுபவ முதிர்ச்சியைப் பாடல்களில் காணலாம். அவரது பாடல்கள் படிப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் மொழிநடையில் அமைந்துள்ளன.

சிறந்த கவிஞராக விளங்குபவர். நமது சிறார்களுக்காகப் பல ஆக்கங்களை எழுதிக் கொண்டிருப்பவர். அவற்றைப் படிப்படியாக உங்களுக்குத் தரவிருக்கிறோம். இந்நூலில் 30 பாடல்கள் உள்ளன. ஒவ்வொன்றும் விரும்பிப் படிக்கும் வண்ணம் உள்ளன. இலகுவான மெட்டுக்களில் பாடலாம். சின்னச் சின்ன விடயங்களை உங்கள் மனங்களில் தங்க வைப்பதற்காக இலகுவான நடையில் எழுதியுள்ளார்.

உங்களுக்காகவே எழுதி வெளியிட்ட இந்நூலைச் சிறுவர்கள் வாங்கிப் படித்து இன்புறவேண்டும். நீங்கள் படித்துப் பயன் பெறவேண்டும் என்பதற்காகவே இந்நூலை வெளியிடுகின்றோம். ஆசிரியர்களும், பெற்றோர்களும் இந்நூலை வாங்கித் தம் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து படிக்கத் தூண்டவேண்டும். வாசிப்பதால் நமது அறிவு விரிவடைகிறது. ஆதலால் இவ்வகை நூல்களை வாங்கிப் படித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

க.சதீஸ்
முகாமையாளர்
லங்கா புத்தக சாலை
கொழும்பு -12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

சிறுவர்கள் சிந்தனைத் திறன் படைத்தவர்கள். எதனையும் துருவி ஆராயும் ஆற்றல் கொண்டவர்கள். சிறுவர்களது உள்ளங்கள் நாற்றுமேடை போன்றன. அவர்களது உள்ளங்களில் சிந்திக்கத் தக்க எண்ணக்கருக்களை விதைக்க வேண்டும். அவ்விதைகள் நல்லனவாகவும், வல்லனவாகவும் இருத்தல் அவசியம். சில கல்விமான்கள் எனப்படுபவர்கள் அறக்கருத்துக்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்கத் தேவையில்லை. நவீன விஞ்ஞான, தொழில்நுட்பக் கருத்துக்களை சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று கூறிவருகின்றனர்.

அறக்கருத்துக்கள் கொண்ட சிறுவர் இலக்கியங்கள் நமது சிறுவர்களுக்கு அவசியம் தேவை என்பதை இன்றைய சமூகம் போகின்ற போக்கை உணர்ந்தால் புரியும். 'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' கலையை நம் இளைய சமுதாயத்துக்கு வழங்க வேண்டியது அவசியமாகிறது. பல்வேறு தலைப்புக்களில் சிறுவர்களுக்கு அறிவைப் புகட்ட வேண்டும். அவ்வகையில் நானும் என்னால் முடிந்தவரை சிறுவர்களுக்காக எழுதுகிறேன். அவர்களுக்கு இவ்வகை நூல்களை அறிமுகம் செய்து படிக்கத் தூண்ட வேண்டும் என்பதே எனது பேராசையாகும்.

இச்செயற்பாட்டினை பெற்றோரும், ஆசிரியர்களும் முன்னெடுக்க வேண்டும். பெற்றாரும், ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குச் சிறந்த வழிகாட்டல்களைச் செய்யத் தவறினால் அதன் எதிர் மாறான பிரதிபலிப்புக்களைத்தான் காணமுடியும். நல்ல சமூகத்தை உருவாக்க சிந்திக்கவைக்கும் ஆற்றலை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

பல்வகையான சிறுவர் பாடல்களைக் கலந்து ஆடிப்பாடும் பாடல் என்ற இந்நூலில் புகுத்தியுள்ளேன். சிறுவருக்கு இவற்றை அறிமுகம் செய்து சிந்திக்க வையுங்கள். பாடவையுங்கள். நல்லறிவைப் பெற உதவுங்கள். இந்நூல் உரு வாக் கத் துக் கு உறுதுணையாக நின்ற அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி.

நன்றி

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...............


1. எங்கள் அம்மா
2. எங்கள் அப்பா
3. எங்கள் பாட்டி
4. காகம்
5. கரிக்குருவி
6. நாய்க்குட்டி
7. செல்லப்பிராணி
8. வீட்டு மணியொலி
9. தண்ணீர்
10. மலர்கள்
11. பந்தாட்டம்
12. விடியற்காலை
13. மாலை நேரம்
14. உலகம்
15. கல்வி
16. புவிக்கோளம்
17. மாம்பழம்
18. பூனை
19. கூண்டுக்கிளி
20. வெள்ளைக் கொக்கு
21. ஆலா
22. இசையும் அசைவும்
23. பட்டம்
24. நூல்கள்
25. ஆசிரியர்கள்
26. விளையாடுவோம்
27. தாய்தந்தை
28. கடலும் செயலும்
29. பழக்கலவை
30. சந்திரன் உதயம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா



ஊனுயிர் தந்து உலவவிட்டாய்
உருகி உருகி நிதம்வளர்த்தாய்
தேனினும் இனிய மொழிதந்தாய்
தெவிட்டா தின்பம் எனக்கொண்டாய்

கொஞ்சி முத்தம் தரும்போதும்
கோல மொழியால் குளிரவைத்தாய்
கெஞ்சும் விழியால் உணர்வுகளை
கொட்டி எனையே வளர்த்திட்டாய்



வண்ண ஆடைகள் தெரிந்தெடுத்து
வடிவாய்ச் சூட்டி மகிழவைப்பாய்
உண்ணும் அழகைப் பார்த்திருந்து
உள்ளம் மகிழ்ந்து எனையணைப்பாய்



தொட்டில் ஆட்டும் கைகளையும்
தோளில் முதுகில் சுமப்பதையும்
தொட்டு மடியில் சாய்ப்பதையும்
தாயே நினைந்து உருகுகிறேன்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா



அப்பா எங்கள் வழிகாட்டி
அவரே எங்கள் உயிரூட்டி
அப்பா சொல்லே அறிவுரையாம்
அவரே எங்கள் உயிர்க்காற்றாம்.



அன்பு மழையால் குளிரவைப்பார்
அரிய தனைத்தும் அறியவைப்பார்
என்றும் உண்மை வழியுணர்த்தி
உச்சி மோந்து உரந்தருவார்



தோளில் தூக்கி தொல்லுலகின்
தெளிவை உணர்த்தி அறிவூட்டி
நாளும் பொழுதும் தனையுருக்கி
நமக்காய் உழைக்கும் பெருமகனார்

உள்ளக் கோயில் தனிலுறையும்
உலவும் எங்கள் பெருந்தெய்வம்
உள்ளம் உள்ள வரைநாங்கள்
உள்ளத் திருத்தி உவப்போமே.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாட்டி



எங்கள் பாட்டி பெருந்தங்கம் - அன்பு
இழைத்துப் பொழியும் சுரங்கம்
திங்கள் ஒளிரும் மதிமுகத்தில் - எழில்
திகழும் வண்ணச் சிரிப்பதனில்.



வம்சம் வளர்க்கும் மூலமவர் - எம்மை
வந்து காக்கும் தெய்வமவர்
அம்மா அப்பா யாவரையும் - மிக்க
அன்பாய்ப் போற்றி அருளுபவர்



காலை எழுந்து அருகணைந்து - கையால்
கட்டி அணைத்தன் பூட்டுபவர்
வேலை பலவும் இருந்தாலும் - எம்
வேலைகள் முடிக்க உதவுபவர்



கதைகள் சொல்லித் தருபவர் - எம்மைக்
களிப்பில் ஆழ்த்தி மகிழ்பவர்
இதயக் கோயில் அமர்ந்து - எம்மை
ஆசீர் வதித்து இருப்பவர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகம்




காகம் பறவை இனமாகும்
கறுப்பு அதனது நிறமாகும்
ஊகம் கொண்டு உயிர்வாழும்
ஒற்றுமை அவற்றின் உயிராகும்.



காகம் சனியின் வாகனமாம்
காலையில் எழுந்து கரைந்திடுமாம்.
காகம் கரைந்தால் விருந்துவரும்
கடிதம் செய்திகள் கூடவரும்.



வசந்த காலம் உருண்டுவரும்
வாடும் குயிலுக்கும் வாழ்வளிக்கும்
இசைந்து மனிதர் உடனிருக்கும்
எதையும் உணவாய் உட்கொள்ளும்.



குதிரையின் முதுகில் மயிர்பிடுங்கும்
கூடும் கட்டிக் குடியிருக்கும்
புதினம் குயிலின் குஞ்சுகளைப்
போற்றி வளர்த்துப் பறிகொடுக்கும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரிக் குருவி



காலைக் கதிரவன் ஒளிபரப்பும்
காரிருள் மெல்ல கலைந்தொதுங்கும்
சோலை எங்கும் கரிக் குருவி
சுந்தர இசையில் பாட்டிசைக்கும்.




முருங்கை மரத்துக் கொப்பினுள்ளும்
முதிரை மரத்தின் கிளைகளிலும்
விரும்பி இருந்து பாட்டிசைக்கும்
மெல்லப் பொழுதும் எழும்பிவரும்



நாலு திக்கிலும் இசையெழும்பும்
நாக்கை மடித்து விசிலடிக்கும்
சூழும் கதிரலை சூள்பிடிக்கும்
சூழ்ந்து பறவைகள் பாட்டிசைக்கும்



காது இனிக்கத் தேன்பாயும்
காணும் காட்சி மனமீர்க்கும்
மோதும் உணர்வுகள் சேர்ந்தாடும்
முத்தமிழ் வந்து நடைபயிலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குட்டி



சீசர் என்பதென் நாய்க்குட்டி
சீராய் வளருது என்வீட்டில்
பாசம் காட்டும் சேவகனாய்
பார்த்து இருக்குது தன்பாட்டில்.




காவல் கடமையில் மூழ்கியெழும்
காலை வரைக்கும் விழித்திருக்கும்
கூவல் பறவை கோழியினம்
கேட்டுக் கண்ணை மூடிக்கொள்ளும்.



ஆற்றில் போட்டால் மிதந்துவரும்
அசைந்து மெல்ல கரையொதுங்கும்.
வேற்று மாந்தர் வருகையினை
விரைந்து சொல்லிடும் நாய்க்குட்டி.



நாலு கால்களில் பாய்ந்துவரும்
நான் எறிபந்தை எடுத்துவரும்
நாளும் உதவி வளைந்துவரும்
நன்றி நாயின் உயர்குணமாம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணி



காலை எழுந்து கண்துடைக்கும்
கவலை இன்றிக் கூன்நிமிர்த்தும்
காலை நீட்டி வால்முறுக்கும்
காவல் இருக்க எலியோடும்



பஞ்சுப் பாதம் கூர்நகங்கள்
பளிங்குக் கண்கள் கூர்பார்வை
அஞ்சும் எலிகள் ஒளிந்துவிடும்
அரசன் போலே பவனிவரும்.



வீட்டைச் சுற்றி சீசருடன்
விடியும் வரைக்கும் கூத்தடிக்கும்
கூட்டுச் சேர்ந்து காவல்செய்யும்
குதித்துத் தாவி மதிலேறும்



பந்தை உருட்டி விளையாடும்
பாய்ந்து காலால் தட்டிவிடும்
சொந்தம் பூஸ்மா எனதருமை
செல்லப் பிராணிப் பூனைக்குட்டி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு மணியொலி



எங்கள் வீட்டுக் கதவோரும்
இருக்கும் மணியும் ஒலிக்கிறது
சங்கு முழங்கும் கோயிலிலே
சத்தம் போலே கேட்கிறது.




காவல் செய்யும் நாய்க்குட்டி
குரைத்து எழுந்து வாலாட்டும்
ஆவல் கொண்ட கண்களெலாம்
ஆரெவர் என்றே சுழன்றாடும்

கதவு தானாய் திறந்துகொள்ளும்
கண்ணில் தங்கை நிழலாடும்
மெதுவாய் அப்பா முகந்தெரியும்
மெல்லத் தங்கை குரலொலிக்கும்



அப்பா அணைத்து முத்தமிட
அம்மா பாடம் சொல்லித்தர
தொப்பாய் அன்பு மழையினிலே
தொடர்ந்து நனைவோம் அன்பினிலே










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்



பூமித் தாயின் மடியினிலே - சுரந்து
புனலாய் ஊற்றுக் கண்திறக்கும்
சாமி தந்த கொடைகளிலே - நல்ல
தண்ணீர் உயிர்க்குத் துணையாகும்

உலகில் வாழும் உயிர்களுக்கு - தண்ணீர்
உணவாய் மாறி உயிர்காக்கும்
நிலவும் வெப்பம் நீர்நிலையை - மூன்று
நிலையில் உலவ வைத்திருக்கும்



திரவ நிலையில் குடிக்கின்றோம் - அதை
திண்ம நிலையில் 'ஐஸ்' என்போம்
திரவ நீரும் கொதிகொண்டால் - ஆவி
திரண்டு மேலே முகிலாகும்



முகிலே மழையாய் மாறிப்பின் - புவியில்
மாரி யெனவே பொழிந்திடுமாம்
அகிலம் செழிப்பது மழையாலே - என்ற
அறிஞரின் சொல்லை வேதமென்போம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்கள்



தாவர வகைதான் பூச்சூடும்
தரையில் வளர்ந்து கூத்தாடும்
காவெலாம் பூத்துக் கண்பறிக்கும்
காணும் உள்ளம் கவிபாடும்



குளத்தில் தாமரை மொட்டவிழும்
கழுநீர் ஆம்பல் கட்டவிழும்
தளம்பும் நீர்நிலை அலைகளிலே
தாளம் போட்டு அசைந்தாடும்



மல்லிகைக் கொடியும் மலரேந்தும்
மணமும் காற்றில் வெறியூட்டும்
அல்லிப் பூக்கள் மலர்ந்தாடும்
அழகு ரோஜா தேன்சிந்தும்



வண்டு பறந்து தேன்தேடும்
மாந்தி வயிற்றுப் பசியாறும்
உண்டு மகிழும் வேளையிலே
உதவும் மகரந்த மணிபரவும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தாட்டம்



பாலர் சேர்ந்து வந்தார் - கையில்
பந்து கொண்டு வந்தார்
மேலே தூக்கி எறிந்தார் - கீழே
விரைந்து வரவே பிடித்தார்.



காலால் பந்தை அடித்தார் - அது
கருங்கற் சுவரில் மோதி
கோளாய் சுழன்று வரவே - அவர்
குனிந்து தட்டி விட்டார்.

தடித்த பெரிய உறையுள் - காற்றை
தள்ளி நிரப்பிக் கொண்டார்
பிடித்து நெஞ்சில் அணைத்தார் -நீரில்
பாய்ந்து நீச்சல் அடித்தார்



காற்றின் செயலை வியந்தார் - பந்து
காட்டும் திறனை அறிந்தார்
போற்றிப் பந்தை எறிந்தார் - சேர்ந்து
பாடி மகிழ்ந்து கொண்டார்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியற்காலை



கிழக்கு வானம் வெளிக்கும் - முகிலைக்
கிழித்து ஒளியும் பரப்பும்
முழக்கம் மணிகள் ஒலிக்கும் - இசையில்
மூழ்கி உலகம் சிரிக்கும்


ஆடு மாடு கோழி - விலங்கு
அனைத்தும் அலையத் தொடங்கும்
காடு புதிய காற்றை - நமக்கு
காட்டும் உயிரை ஊக்கும்.




பரிதி சுடரைப் பரப்பும் - விளக்கு
பதுங்கும் மூலை உறங்கும்
எரியும் அடுப்பு உலையில் - உணவு
ஏறி சமையல் ஆகும்



பள்ளி செல்லும் பிள்ளை - மெல்ல
பதுங்கும் நடையில் செல்லும்
அள்ளிச் சூடும் மலர்கள் - அம்மா
அன்புப் பிடியில் சிலிர்க்கும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை நேரம்



மாலை நேரம் மேற்குச் சிவக்கும்
மஞ்சள் வெயிலைப் பெருக்கும்
சோலை எங்கும் சூடும்கோலம்
சொர்க்கம் வானம் காட்டும்



ஆடி மகிழ்ந்த சிறுவர் நாங்கள்
ஆடி நீரில் குளிப்போம்
சூடி மலரால் இறைவன் பாதம்
தொழுது போற்றிப் படிப்போம்




கிழக்கு வானில் திங்கள் உதிக்கும்
கிளர்ந்து அல்லி சிரிக்கும்
மலரும் வாசப் பூக்கள் விரியும்
வண்டு சுற்றி இசைக்கும்



தொட்டில் ஆடும் பாட்டுப் பரவும்
துள்ளும் கன்று நிமிரும்
சிட்டு நாங்கள் சேர்ந்து படிப்போம்
தேசம் வாழ நினைப்போம்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகம்



ஆமை மீது பூமி இருக்கு
என்று சொன்னார்கள்
பூமி ஒரு தட்டை வடிவம்
பலரும் சொன்னார்கள்



பூமி இருக்கச் சூரியானார்
பார்த்துச் சுற்றுறார்
ஆமாம் இதைக் கேட்கவேணும்
என்றும் சொன்னார்கள்




சாமி யாரின் சொல்லை மீறிச்
சொல்ல முடியாது
பூமி ஒரு கோளமென்று
படித்துக் கண்டார்கள்.



சூரியனைச் சுற்றி கோள்கள்
சூழ்ந்து வருவதை
பாரில் உள்ள ஞானியர்கள்
பார்த்துச் சொன்னார்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

கண்ணால் காட்சி காண்கின்றோம்
காதால் ஒலியைக் கேட்கின்றோம்
எண்ணக் கருவை நம்மூளை
உடனே பதிந்து கொள்கிறது



மூக்கால் மணந்து பார்க்கின்றோம்
மூச்சை இழுத்தும் விடுகின்றோம்
நாக்கால் சுவையை ருசிக்கின்றோம்
நாவால் மொழியை கதைக்கின்றோம்.




காற்று வீசி உடல்தழுவும்
காணும் மூளை பதிந்துகொள்ளும்
நேற்று பதிந்த நிகழ்வுகளை
நினைவில் கொள்ளல் கல்வியாம்.

கல்வி நமது கண்திறக்கும்
கற்றால் நமது மனம்வெளுக்கும்
கல்வி என்பது அனுபவமாம்
கற்பது என்பது செய்வதுவாம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவிக்கோளம்

சூரியக் குடும்பம் வான்வெளியில்
சுழன்று வருகுது பெருவெளியில்
பாரிய கோள்கள் ஒன்ப துண்டு
பகலவன் நடுவில் சுழல்கிறது.


புதன் வெள்ளி பூமி செவ்வாயும்
பாரிய வியாழன் சனி யுரேனசும்
அதனயல் நெப்டியூன் புளூட்டோவும்
அதனதன் பாதையில் சுழல்கிறது.

பூமிப் பந்தும் ஒருகோள்தான்
புதினம் நமது புவியிலுண்டு
பூமியின் வடிவம் என்னவென்று
பலசெய்தி சொன்னவர் பாரிலுண்டு

சமதளத் தட்டுப் பூமியென்றார்
தளத்தில் தரைகடல் பரந்துளது
சுமக்கும் ஆமை முதுகினிலே
சுகமாய் பூமி இருக்குதென்றார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழம்




கொத்துக் கொத்துக் குலைகளாய்
குலுங்கும் மாங்காய் மரத்திலே
அத்தனையும் பறித்து உண்ண
ஆசை மனதில் துள்ளுதே




காய்கள் பச்சை நிறத்திலாடும்
கடிக்க நாவில் புளிப்புமேறும்
வாய்கள் நிறைந்து வாணீரூறும்
வாநரங்கள் பறித்து உண்ணும்.


காய்கள் முற்றிப் பழங்களாகும்
கனிந்து மஞ்சள் நிறமுமாகும்
தோய்ந்து நாவும் இனிமையூறும்
தேமதுரம் உடலில் ஊறும்



அணில் பறவை உண்டுமகிழும்
இரவில் வௌவால் பசியுமாறும்
மணி யொலித்தால் ஓடிமறையும்
மீண்டும் வந்து சுவைத்து மகிழும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனை

கறுத்தப் பூனை பால்குடிக்கும்
காவல் நிற்கும் களுவன்பூனை
வெறுத்து ஒன்று பார்த்திருக்கும்
விரைந்து மெல்ல ஓடிமறையும்.




எலிகள் வந்து கூத்தடிக்கும்
எட்டிப் பார்த்து கண்சிமிட்டும்
புலியை மரத்தில் ஏறவிட்டு
படுத்து மெல்ல ரசித்திருக்கும்



எழுந்து முதுகை வளைத்தெடுக்கும்
எடுத்த காலை மடித் திழுக்கும்
வளைந்த வாலை நிமிர்த்தியாட்டும்
வாளிப் பாய்ந்து ஓடித்திரியும்.



பதுங்கும் எலியைக் கண்டுகொள்ளும்
பாவம் என்று ஏய்த்துநிற்கும்
ஒதுங்கி மூலை இருந்துகொண்டு
ஓரக் கண்ணால் பார்த்திருக்கும









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டுக் கிளி



காட்டில் வாழ்ந்த என்னையேனோ
கூடிப் பிடித்து வதைக்கிறீர்?
கூட்டில் என்னை அடைத்ததேனோ
கொடிய வாழ்வைத் தந்துளிர்?


அம்மா அப்பா குடும்பவாழ்வை
அல்லல் படுத்தி அழிக்கிறீர்
சும்மா உயிரை வதைப்பதுதான்
சுகமாம் என்று கொள்கிறீர்.



பாலும் பழமும் தந்தாலுமென்
பதைக்கும் மனதைப் புரியுமா?
நாலு திக்கும் சென்றுநானும்
நலமாய் ஆட முடியுமா?

இந்த உலகின் இன்பமெல்லாம்
இந்த இரும்புக் கூட்டிலா? சு..
தந்திரத்தை மட்டும் நீங்கள்
சொந்தம் ஆக்கிக் கெள்வதா?









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் கொக்கு




கொக்குப் பறந்து வந்தது - ஆற்றங்
கரையில் தரித்து நின்றது
பக்கம் சுற்றிப் பார்த்தது - பின்
பதுங்கி அமைதி காத்தது

தண்ணீர் தளம்பித் தணிந்தது - காற்றுத்
தள்ளி நீரைத் தொட்டது
கண்ணை மூடிக் கொண்டது - அதன்
கழுத்தை நீட்டிக் கொண்டது

கொக்கு அண்ணா தூங்குறார் - ஒற்றைக்
காலில் நின்று மாய்கிறார்
பக்கம் போனால் ஆபத்து - அவர்
பதுங்கல் வேட்டைக் குறியதாம்



ஒற்றைக் காலில் நின்றவர் - மீன்
ஓடும் போது விழித்தனர்
சற்றுக் கொழுத்த மீன்வர - அதைச்
சாடி அலகால் பிடித்தனர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலா

ஆலா சிறகை விரித்தது
அழகாய் வானில் பறந்தது
மேலே மேலே சென்றது
விழியால் நோட்டம் விட்டது

நீலக் கடலும் நெளிந்தது
நீந்தும் மீனும் தெரிந்தது
வேலன் விட்ட அம்புபோல்
விரைந்து நீரைக் கிழித்தது

கோலச் சிறுவர் பார்த்தனர்
'ஹாய் ஹாய்' சத்தமிட்டனர்
காலால் இறாஞ்சிப் பார்த்தது
கண்ட மீன்கள் பதுங்கின.

பாவம் ஆலா பறந்தது
பார்த்த சிறுவர் பாடினார்
'வாவா ஆலா இங்கேவா
வடிவாய் சோறு தருகிறோம்'









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் அசைவும்



கள்ளிச் செடியின் இலையை மடித்துக்
கையில் பிடித்து விரித்தேன்
வெள்ளைப் பாலில் திரையுருவாகி
மெல்ல உருவம் அசைந்தது.



காற்றுச் சுழன்று திரையில் உருள
காட்சி வந்து குவிந்தது.
நேற்று மேற்குவானில் தெரிந்த
நேர்த்தி வில்லும் வளைந்தது.



கீரி பாயும் பாம்பு சீறிடும்
கீர்த்திகள் காட்சி தோயும்
மாறி மாறி படமாய் ஓடும்
மயக்க வைத்துக் காட்டும்



பன்னீர்ப் பூவை இரண்டாய் உடைத்து
பாதியை வாயில் வைத்து
உன்னிக் காற்றை உள்ளே இழுத்து
ஊத இசையும் பிறந்தது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம்



பட்டம் கட்டிப் பார்க்க மனம்
பாடித் துள்ளுது
சிட்டாய் வானில் பறக்கும் போது
சிரித்துக் கொள்ளுது


மூங்கில் தடியைத் தேடி யெடுத்து
மூலை பார்க்குது
தாங்கும் வண்ணம் பிளந்து நறுக்கித்
துண்டம் செய்யுது.

வண்ணத் தாளை வெட்டி எடுத்து
வடிவம் பார்க்குது
எண்ணம் போல வாலும் வைத்து
எடுப்புப் பார்க்குது

சிட்டுப் போன்ற பட்டமொன்று
சிரித்துத் துள்ளுது
பட்டம் வானில் சுற்றிச்சுழன்று
பவனி வருகுது.

பாம்பு நீந்தும் பறவை பறக்கும்
பட்டங் கட்டுவோம்
சோம்பல் நீங்கும் துயரம் போகும்
சேர்ந்து பாடுவோம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நூல்கள்



நல்ல நல்ல நூல்கள் தேடி
நாளும் நாங்கள் படிப்போம்
தொல்லை நீங்கும் வழியைக்காட்டித்
துயரம் பறக்கச் செய்யும்



உள்ளம் தூய்மை பெற்றுயரும்
உயர்வு வந்து கூடும்
கள்ளம் கபடம் விட்டோடும்
கனிந்த அறிவும் ஊறும்



நல்லதோர் நூலினைப் போலே
நண்பர் நமக்கு வாய்ப்பரோ
வெல்லும் வழிகளைச் சொல்லும்
விழுமியம் மனதிலே விளைக்கும்



நல்வித்தைக் கொண்ட நூல்தான்
நாளும் படித்திட உயர்த்தும்
அள்ளிட அள்ளக் குறையாத
அறிவினைக் கொண்டநற் சுரங்கம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள்



அன்னை எமது முதலாசான்
அவரின் மடிதான் முதற்பள்ளி
என்றும் அன்னை எம்தெய்வம்
என்றே போற்றித் தினம்வாழ்வோம்



அப்பா எமது உயிர்காக்கும்
அருமை மிக்க பெருந்தெய்வம்
எப்போது மவர் துணையிருக்க
இறைவன் அருளைப் பெறுவோமே

மூன்று வயதினில் முன்பள்ளி
முன்னே ரீச்சரும் வரவேற்பார்
சான்றோன் ஆக்கும் வழிகாட்டி
சாதனை காட்ட முன்நிற்பார்



துள்ளிச் செல்வோம் உயர்கல்வி
தூக்கி விடுமாம் உயர்நிலைக்கு
அள்ளிச் செல்வம் தேடிவரும்
ஆசான் அனைவர்க்கும் துணையாவார்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடுவோம்



காணும் பொருட்களைச் சேர்ப்போம்
கண்டதை எடுத்துக் குவிப்போம்
தோணும் முறையினில் தெரிவோம்
தெரிந்து அவற்றை தொகுப்போம்



பூக்களை கைகளால் அளைவோம்
பார்த்தும் மணந்தும் உணர்வோம்
சோக்காய் நிறங்களைப் பிரிப்போம்
சிறிது பெரிதாய்க் குவிப்போம்




பொருட்களைப் பொருத்திப் பார்ப்போம்
பொருந்த உருவங்கள் செய்வோம்
பருப்பு விதைகளைப் பொதிவோம்
பந்தாய்ச் செய்து அடிப்போம்.



ஓடிப் பாய்ந்து பறப்போம்
ஒளித்துப் பிடித்து நடிப்போம்
கூடி ஆடி மகிழ்வோம்
கொள்ளை இன்பம் கற்போம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாய்தந்தை



குடும்பம் என்பது கோயில் - அங்கு
குலவும் மாந்தர் தெய்வம்
குடும்பம் இன்பம் கண்டால் - நம்
குவலயம் சொர்க்கம் காணும்.




தந்தை குடும்பத் தலைவன் - என்றால்
தாய்தான் அதற்குத் தலைவி
எந்தை வழியில் சென்று - உலகை
எளிதாய் வெற்றி கொள்வோம்.



அன்பை அம்மா ஊட்ட - எம்
அப்பா தெம்பைத் தருவார்
கன்னல் தமிழில் அறிவை - நமக்கு
கற்றுத் தருவார் ஆசான்.

ஒன்றே மனித குலமென்பார் - இங்கு
ஒருவனே தேவன் உண்டென்பார்
என்றும் அவரைத் தொழுவோம் - உலகில்
ஏற்றம் பெற்று உயர்வோம்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடலும் செயலும்



அசையும் காற்று கடலினை அமுக்கும்
ஆடித் தண்ணீர் தளர்ந்து கூத்திடும்
இசையுடன் அலைகள் மெல்ல எழுந்திடும்
இரைந்து கரையினில் மோதி உடைந்திடும்




கரையைத் தகர்த்து மணலை வாரிடும்
கரைந்த மணலும் புரண்டு உருண்டிடும்
நுரைத்து கடல்நீர் மாலை தொடுத்திடும்
நீண்டு அடையலை கரையில் பரப்பிடும்




கட்டு மரங்கள் கடலில் மிதந்திடும்
கண்டு மீனினம் துள்ளிக் குதித்திடும்
விட்ட வலைகளில் பட்ட மீன்களை
விரைந்து மீனவர் மீட்டு எடுப்பராம்



விளையா வயலதாய் விரிந்த கடலிலே
வீசும் காற்றினால் விளைபயன் ஆயிரம்
தளரா மனங்கொண்ட சாதனையாளரால்
சுகம் பல உலகமே காணுமாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழக்கலவை



முக்கனி என்பது என்னம்மா
மா பலா வாழை தானம்மா
எக்கனி சுவைத்து உண்டாலும்
இக்கனிச் சுவைபோல் வருமா?



பழவகை யாவிலும் சுவையுண்டு
பலவித புரதமும் அதிலுண்டு
பழரசம் உடலுக்கு வலுவூட்டும்
பழங்களை விரும்பி உண்ணுங்கள்




பலாக் கனிச் சுளையினை எடுத்து
பதமாய்த் தேனிலே தோய்த்து
அழகாய் வாயினுள் திணித்து
அருந்து சுகமுனைச் சேரும்



பழங்களின் சாற்றினைச் சேர்த்து
பதநிட்டு பொதிகளில் அடைத்து
பழகு, பலநாள் பயன்தரும்
பருவ காலங்கள் பறந்தோடும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சந்திரன் உதயம்




சூரியன் காலையில் உதிக்கும் - இருள்
சுருண்டுமே ஒளிந்து கொள்ளும்
காரியம் முடிந்ததும் மேற்கில் - மறைய
காரிருள் பரந்து இரவாகும்



சந்திரன் உதயங்கொள் நேரம் - நமக்கு
சரியாய்த் தெரிவது இல்லை
இந்திர லோகத்து வித்தை - இதை
எவரும் உணர்ந்ததும் இல்லை.




கடலலை துள்ளியே பாயும் - இரைந்து
கரையினில் மோதியே உடையும்
படகினை உயர்த்தித் தாழ்த்தி - அதன்
பயணத்தைத் தொடர்ந்திடச் செய்யும்.



பூரண நிலவினில் உலகம் - மகிழ்ந்து
பூரித்துக் களித்திடும் போது
ஊரெலாம் பகலாய் தெரியும் - சிறுவர்
ஓய்விலா ஆட்டத்தில் களிப்பார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் சிறுவர் நூல்கள்

| இல. | நூலின் பெயர் | நூலின் வகை | |
|---|---|---|---|
| 01. | இன்பக் கனிகள் | சிறுவர் பாடல் | |
| 02. | பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல் | |
| 03. | காகமும் தம்பியும் | சிறுவர் பாடல் | * |
| 04. | பாடி ஆடுவோம் | சிறுவர் பாடல் | |
| 05. | கடலும் காவிரியும் | சிறுவர் பாடல் | |
| 06. | சின்னச் சின்னப் பாட்டு | சிறுவர் பாடல் | |
| 07. | மனதுக்கினிய பாட்டு | சிறுவர் பாடல் | * |
| 08. | ஆனந்தமான பாட்டு | சிறுவர் பாடல் | |
| 09. | சகோதரராய் வாழ்வோம் | சிறுவர் பாடல் | |
| 10. | இசையோடு அசைவோம் | சிறுவர் பாடல் | * |
| 11. | தம்பிக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் | |
| 12. | அறிவைத் தரும் பாடல்கள் | சிறுவர் பாடல் | * |
| 13. | இனிக்கும் பாடல்கள் | சிறுவர் பாடல் | |
| 14. | அறிவொளிப் பாடல்கள் | சிறுவர் பாடல் | |
| 15. | தங்கைக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் | |
| 16. | ஆடிப்பாடும் பாடல் | சிறுவர் பாடல் | |
| 17. | ஆடி மகிழ்வோம் | சிறுவர் ஆடலும் பாடலும் | |

**சிறுவர் கதைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | பூஞ்சிட்டுக்கள் | சிறுவர் கதைகள் | |
| 02. | சின்னத் தேவதைகள் | சிறுவர் கதைகள் | * |
| 03. | கண்ணனும் இராமனும் | சிறுவர் கதைகள் | |
| 04. | தங்க மாம்பழம் | சிறுவர் கதைகள் | |
| 05. | சிறகு வைத்த கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 06. | சாதனையாளர் | சிறுவர் கதைகள் | |
| 07. | அற்புதமான வானம் | சிறுவர் அறிவியல் கதைகள் | * |
| 08. | பார்த்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 09. | மலைத்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 10. | சுவையான கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 11. | சின்னச் சின்ன சிறுவர் கதைகள் | சிறுவர் கதைகள் | * |
| 12. | சந்திரன் கதைகள் | சிறுவர் கதைகள் | |
| 13. | வித்தகன் விபுலானந்தன் | சிறுவர் இலக்கியம் | |

**English Stories**

| | | |
|---|---|---|
| 01. | The Little Spider | for Children |
| 02. | The Butterflies and Children | for Children |
| 03. | The Crow and the Cuckoo | for Children |
| 04. | The tree and the Parrot | for Children |
| 05. | The Elephants and Ants | for Children |
| 06. | The Man and the Fish | for Children |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ISBN : 978-955-53372-2-9**

**Price : Rs. 150/-**

**Printed by :**

**NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org